புதிய பாடத்திட்டம் New Syllabus

A/L Accounting By M.M.TH... H A Publication of ALC Santhively.
A/L Accounting By M.M.TH... H A Publication of ALC Santhively.
A/L Accounting By M.M.TH... SH A Publication of ALC Santhively.

மாதிரி வினாத்தாள் 01

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020 ஓகஸ்ற்

கணக்கீடு - I
Accounting - I

33 | T | I

இரண்டு மணித்தியாலம்.
Tow hours

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்.

சகல வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவிற்கும் 02 புள்ளிகள் வழங்கப்படும் மொத்தம் புள்ளிகள் 100 ஆகும்.

- **இலக்கம் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையினைத் தெரிவு செய்து விடையின் இலக்கத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- **இலக்கம் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு புள்ளிக்கோட்டின் மீது விடை எழுதுக.**

1. பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களில் எது நிதிக் கணக்கீட்டின் முக்கியத்துவத்தை சிறப்பாக விபரிக்கின்றது.
   (1) வணிகத்தின் நிதிநிலைமை பற்றி உள்ளகத்தரப்பினருடன் தொடர்படுதல்.
   (2) வணிகத்தின் அக்கறை செலுத்தும் புறத்தரப்பினருக்கும், முகாமையாளருக்கும் தீர்மானம் மேற்கொள்ளுவதற்கு தேவையான தகவல்களை வழங்குதல்.
   (3) வணிக வளங்களை கட்டுப்படுத்தலும் செயற்படுத்தலும்.
   (4) வணிகத்தின் சொத்துக்களை பாதுகாப்பதற்கான தகவல்களை அகத்தரப்பினருக்கு வழங்குதல்.
   (5) வணிக தகவல்களை அறிக்கையிடல், பகுபாய்வு செய்தல், தீர்மானம் மேற்கொள்ளல். (……)

2. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கான **மூல ஆவணங்களை** சரியாக இணைக்கும் விடைத்தொகுதியை தெரிவுசெய்க

	கொடுக்கல் வாங்கல்		**மூல ஆவணம்**
A	உரிமையாளர் பொருள் பற்று	1.	வரவுத்தாள்
B	விநியோகஸ்தருக்கான கொள்வனவு திருப்பம்	2.	பட்டியல்
C	பெறப்பட்ட தரகு வருமானம்	3.	பற்றுச் சீட்டு
D	கடனுக்கு பொருள் விற்பனைகள்	4.	நாட்குறிப்பேட்டு கைச்சாத்து

   (1) A-4, B-1, C-3, D-2 (3) A-4, B-3, C-2, D-1 (5) A-3, B-4, C-1, D-2
   (2) A-1, B-3, C-2, D-4 (4) A-2, B-3, C-1, D-4 (……)

3. வணிகமொன்றின் வங்கி கூற்று மீதியானது 31.03.2020 இல் ரூ. 61 000 ஆக இருந்தது. எனினும் மார்ச் மாத வங்கி கூற்றில் வரவு வைக்கப்படாத, செலவு வைக்கப்படாத காசோலைத் தொகைகள் முறையே ரூ. 14 000, ரூ. 8 000 ஆகும். ரூ. 21 000 இற்கான காசோலையொன்று வைப்பிலிட்டபோது அதற்கான பதிவு காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூ. 12 000 என பதிவிடப்பட்டுள்ளது.
   31.03.2020 இல் உள்ள காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு அமைவது எது?

	சீராக்கத்துக்கு முன் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி	சீராக்கத்துக்கு பின் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி
(1)	ரூ. 67 000 வரவு	ரூ. 58 000 வரவு
(2)	ரூ. 67 000 செலவு	ரூ. 76 000 செலவு
(3)	ரூ. 46 000 வரவு	ரூ. 55 000 வரவு
(4)	ரூ. 67 000 வரவு	ரூ. 76 000 வரவு
(5)	ரூ. 61 000 செலவு	ரூ. 58 000 வரவு

(……)

4. 2020 மாரச் மாதத்தில் கடன்படுனரிடம் இருந்து பெறப்பட்ட காசு ரூ. 168 000 இதன் போது அனுமதித்த கழிவு ரூ. 12 000 ஆகும். மார்ச் மாதம் கடன்படுனர் மீதியில் ஏற்பட்ட குறைவு ரூ. 30 000 ஆகும். மொத்தலாப எல்லை கிரயத்தில் 50% ஆகவும் 2020 மாரச் மாதத்திற்கான செயற்பாட்டு செலவுகள் ரூ. 34 000 ஆகவும் இருந்துது.
   மார்ச் மாத கடன் விற்பனை, மார்ச் மாத நிகர இலாபம் என்பன முறையே?

   (1) ரூ. 100 000, ரூ. 66 000 (3) ரூ.120 000, ரூ. 86 000 (5) ரூ. 150 000, ரூ. 66 000
   (2) ரூ. 150 000, ரூ. 16 000 (4) ரூ.100 000, ரூ. 34 000 (……)

5. வணிகமொன்றின் குறித்தகாலப் பகுதி ஒன்றுக்காக பெறப்பட்ட தகவல்கள் வருமாறு.
   - ✓ நடைமுறை அல்லா சொத்துக்களின் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 110 000
   - ✓ நடைமுறை சொத்துக்களின் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 70 000
   - ✓ நடைமுறை பொறுப்புகளின் பெறுமதியில் ஏற்பட்ட குறைவு ரூ. 20 000

   அக்காலப்பகுதியில் உரிமையாளர் சொந்த தேவைக்காக எடுத்துள்ள பற்றுத் தொகை ரூ. 10 000 எனினும் மேலதிக மூலதனம் எதனையும் உரிமையாளர் முதலீடு செய்திருக்கவில்லை. எனின் குறித்த காலப்பகுதிக்கான தேறிய இலாபம் யாது?

   (1) ரூ. 200 000 (3) ரூ. 210 000 (5) ரூ. 190 000
   (2) ரூ. 170 000 (4) ரூ. 230 000 (……)

6. வணிகமொன்றின் கடன்படுனர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி 31.03.2020 இல் ரூ. 35 000 ஆக இருந்த போது விற்பனைப்பேரேட்டு பட்டியல் மீதி வேறொரு தொகையாக காணப்பட்டது. இதற்கான காரணங்கள்.
   - ✓ செலவுத்தாள் தொகையான ரூ. 5 100 ஆனது உரிய நபர் கணக்கில் ரூ. 1 500 என பதிவிடப்பட்டுள்ளது.
   - ✓ விற்பனை பட்டியல் ஒன்று ரூ. 6 000 உரிய நபர் கணக்கில் தவறவிடப்பட்டுள்ளது.
   - ✓ காசுப் பெறுவனவு நாட்குறிப்பேட்டிலிருந்து கடன்பட்டோரின் பகுப்பாய்வு நிரல் ரூ. 3 000 தொகையால் குறைத்து கூட்டப்பட்டுள்ளது.

   31.03.2020 இல் உள்ளபடியான திருத்தப்பட்ட கடன்படுனர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி, விற்பனை பேரேட்டு பட்டியல் மொத்த மீதி ஆகியன முறையே யாது?

   (1) ரூ. 35 000, ரூ 31 600 (3) ரூ. 38 000, ரூ. 35 600 (5) ரூ. 32 000, 29 600
   (2) ரூ. 38 000, ரூ 38 000 (4) ரூ. 32 000, ரூ. 29 400 (……)

7. வணிகமொன்றின் வாடகை வருமானம் பற்றிய தகவல்கள் வருமாறு
   - ✓ 01.04.2019 இல் நிலுவை வாடகை வருமானத் தொகை ரூ. 25 000
   - ✓ 31.03.2020 இல் வாடகை வருமான முற்பணத் தொகை ரூ. 30 000
   - ✓ வாடகைக்கிருப்போனால் 2019 ஏப்ரல் மாதத்தில் ரூ. 12 000 செலவில் கட்டடத்திற்கான நீர்விநியோக முறைமையொன்று புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனை மாதாந்த வாடகைக் கட்டணத்தில் கழித்துக்கொள்ள இணக்கம் ஏற்பட்டுள்ளது.
   - ✓ மிகுதி வாடகை வருமானத் தொகை 2019/2020 ஆம் ஆண்டில் காசாக ரூ. 145 000 பெறப்பட்டுள்ளது

   2019/2020 இற்கான வருமானக் கூற்றில் காட்டப்பட வேண்டிய வாடகை வருமானத் தொகை யாது?

   (1) ரூ. 102 000 (3) ரூ. 78 000 (5) ரூ. 84 000
   (2) ரூ. 157 000 (4) ரூ. 90 000 (……)

8. வணிக நிறுவனம் ஒன்று நிதிக்கூற்றை 31.03.2020 இல் தயரித்த போது பின்பற்றிய நடைமுறைகள் வருமாறு.

   A – வாடகை வருமானம தொடர்பாக பெறப்பட்ட காசுத் தொகை ரூ. 180 000 இத் தொகை 30.09.2020 வரையான 18 மாதகாலப்பகுதிக்குரியதாகையால் முற்றடக்க வருமான கூற்றில் ரூ. 120 000 மட்டும் வெயிப்படுத்தப்படீருந்தது.

   B – ஆண்டிறுதி வியாபார இருப்பின் கிரயம் ரூ. 110 000 ஆக இருந்த போதும் நிதிநிலைக்கூற்றில் சொத்தாக அதன் நிகர தேறத்தக்க பெறுமதியான ரூ. 90 000 வெளிப்படுத்தப்பட்டது

   மேற்கூறிய நடைமுறைகள் எவ் கணக்கீட்டு எண்ணக்கருக்களுக்கு அமைவாக முறையே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது

   (1) அட்டுறு, கொள்கை மாறாமை
   (2) அட்டுறு, முன்னெச்சரிக்கை
   (3) வெளிப்படுத்தல், வரலாற்றுக் கிரயம்
   (4) தேறல், கொள்கை மாறாமை
   (5) தேறல், கால அளவீடு (……)

9. வணிகமொன்று பரீட்சை மீதியை தயாரித்த போது அப்பரீட்சை மீதி சமப்படவில்லை அதற்கான காரணங்கள் பின்வருமாறு.
   - ✓ செலுத்திய வாடகைக் கட்டணம் ரூ. 7 500 ஆனது வாடகைக் கணக்கில் ரூ. 5 700 என பதிவிடப்பட்டிருந்தது.
   - ✓ கடன்கொடுத்தோருக்கு செலுத்திய காசு ரூ. 1 200 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவில் ரூ. 2 100 என பதிவிடப்பட்டுள்ளது
   - ✓ மீளப்பெற்ற அறவிடமுடியாக்கடன் ரூ. 1 100 ஒரு செலவாகப் பதியப்பட்டுள்ளது.
   - ✓ மின்சாரக் கட்டணக் கணக்கு மீதி ரூ. 1 000 பரீட்சைமீதியில் இடம்பெறவில்லை.

   பரீட்சை மீதியில் தோற்றியுள்ள தொங்கல் கணக்கு வரவு மீதி மற்றும் இவ்வழுக்களால் இலாபத்தில் ஏற்பட்ட விளைவு ஆகியன முறையே எவை?

   (1) ரூ. 3 900 இலாபம் ரூ. 400 குறைவு
   (2) ரூ. 6 100 இலாபம் ரூ. 600 குறைவு
   (3) ரூ. 3 700 இலாபம் ரூ. 1 800 அதிகரிப்பு
   (4) ரூ. 5 000 இலாபம் ரூ. 1 000 குறைவு
   (5) ரூ. 3 900 இலாபம் ரூ. 600 அதிகரிப்பு (……)

10. வணிகமொன்றின் விற்பனை தொடர்பான தகவல்கள் வருமாறு
- ✓ 01.04.2019 இல் வியாபார இருப்பு ரூ. 40 000
- ✓ 2019/2020 இல் முடிவடைந்த ஆண்டில் வியாபார சென்மதியாளருக்கு மேற்கொண்ட கொடுப்பனவு ரூ. 280 000
- ✓ 2019/2020 இல் வியாபார சென்மதியாளரிடம் பெற்ற கழிவு ரூ. 10 000
- ✓ 2019/2020 இல் வியாபார சென்மதிகளின் மீதியில் எற்பட்ட அதிகரிப்பு ரூ. 20 000
- ✓ 31.03.2020 இல் முடிந்த ஆண்டுக்கான விற்பனைகள் ரூ. 420 000 இவ் விற்பனைகள் விற்பனை விலைகளில் 40% இலாபத்ததை உள்ளடக்கியதாக இடம்பெற்றுள்ளது.

31.03.2020 இல் உள்ள வியாபார இருப்பின் கிரய பெறுமதி யாது?

(1) ரூ 88 000 (3) ரூ. 98 000 (5) ரூ. 78 000

(2) ரூ. 68 000 (4) ரூ. 90 000 (……)

11. உற்பத்தி வணிகம் ஒன்றுடன் தொடர்பான 2019/2020 இற்குரிய தகவல்கள் வருமாறு.
- ✓ மூலப்பொருள் கொள்வனவு ரூ. 640 000
- ✓ நேர்க்கூலிகள் ரூ. 220 000
- ✓ உற்பத்தி மேந்தலை கிரயங்கள் ரூ. 270 000
- ✓ ஆண்டில் குறைவேலை இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 20 000.
- ✓ ஆண்டில் மூலப்பொருள் இருப்பில் ஏற்பட்ட குறைவு ரூ. 90 ஆகும்.
- ✓ ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தி அலகுகள் 400

குறைவேலை இருப்புக்களின் பெறுமதியானது எப்போதும் நேர்க் கிரயங்களை மாத்திரம் உள்ளடக்கி கணிப்பிடப்பட்டுள்ளன.

2019/2020 இற்கான முதல் கிரயம், அலகு ஒன்றுக்கான உற்பத்தி கிரயம் என்பவை முறையே யாது?

(1) ரூ. 950 000, ரூ. 3 000 (3) ரூ. 750 000, ரூ. 2 550 (5) ரூ. 930 000, ரூ. 3 000

(2) ரூ. 900 000, ரூ. 2 500 (4) ரூ. 910 000, ரூ. 2 900 (……)

12. வணிகமொன்றின் மூலப்பொருள் X தொடர்பான தகவல்கள் வருமாறு
- ✓ மறு கட்டளை மட்டம் 5 000 அலகுகள்
- ✓ மாதம் ஒன்றுக்கான உச்ச நுகர்வு 1 000 அலகுகள் .
- ✓ உச்ச இருப்பு மட்டம் 7 000 அலகுக்ள
- ✓ (EOQ) சிக்கனகட்டளை தொகை 3 800 அலகுகள்
- ✓ இழிவு முதன்னைக்காலம் 3 மாதங்கள், எனின்

X பொருளின் இழிவு இருப்பு மட்டம் யாது?

(1) 1 000 அலகு (3) 1 800 அலகு (5) 3 000 அலகு

(2) 2 500 அலகு (4) 1 400 அலகு (……)

13. வணிகமொன்றில் காணப்பட்ட பொறி ஒன்றின் 01.01.2020 இல் உள்ளவாறான கிரயப் பெறுமதி ரூ. 400 000 உம், அத்திகதியில் காணப்பட்ட நான்காண்டுகளுக்கான திரண்ட தேய்வு பெறுமதி ரூ. 160 000 உம் ஆகும். குறித்த பொறியானது 30.06.2020 இல் விற்பனை செய்த போது ஏற்ப்பட்ட நட்டப் பெறுமதி ரூ. 20 000 ஆகும்.

பொறி விற்றுப் பெற்ற காசுத் தொகை யாது?

(1) ரூ. 200 000 (3) ரூ. 210 000 (5) ரூ. 250 000

(2) ரூ. 220 000 (4) ரூ. 180 000 (…….)

14. மாதர் சங்கமொன்றில் வருடாந்தம் ரூ. 200 சந்தா செலுத்தும் 60 அங்கத்தவர்கள் உள்ளனர்.
- ✓ 01.04.2019 இல் வருமதி சந்தா தொகை ரூ. 2 000 உம், முற்பணச் சந்தா தொகை ரூ. 1 200 உம் ஆகும்
- ✓ வருட காலப்பகுதியில் அங்கத்தவர்கள் செலுத்தியுள்ள சந்தா விபரம் வருமாறு
  - ❖ 2018/2019 இற்காக 5 அங்கத்தவர்கள்
  - ❖ 2019/2020 இற்காக 46 அங்கத்தவர்கள்.
  - ❖ 2020/2021 இறகாக 6 அங்கத்தவர்கள்.

31.03.2020 இல் உள்ளவாறான சந்தா நிலுவைத் தொகை யாது?

(1) ரூ. 3 800 (3) ரூ. 2 600 (5) ரூ. 3 200

(2) ரூ. 1 300 (4) ரூ. 2 400 (…….)

do not copy by M.M.Thinesh

15. வணிகமொன்றின் சில்லறை காசாளரால் முன்வைக்கப்பட்டுள்ள தகவல்கள் வருமாறு.

காலம் 2020	பகுப்பாய்வு வகை				குறிப்பு
	பிரயாணம்	எழுதுபொருள்	உபசரிப்பு	தபால்	
மார்ச்	ரூ. 750	ரூ. 400	ரூ. 700	ரூ. 250	மொத்த வசக்கட்டுத் தொகையில் 75%
ஏப்ரல்	ரூ. 600	ரூ. 550	ரூ. 900	ரூ. 450	----------

மீள்நிரப்பல் ஒவ்வொருமாத தொடக்கத்திலும் இடம்பெறுகிறது.

30.03.2020 இல் உள்ளவாறான சில்லறை காசேட்டு மீதி யாது?

(1) ரூ. 300 (3) ரூ. 500 (5) ரூ. 900
(2) ரூ. 450 (4) ரூ. 650 (…….)

16. வணிகமொன்றின் குறித்தகால பகுதிக்கான கடன்பட்டோர் தொடர்பான தகவல்கள் வருமாறு.

- ✓ 01.04.2019 இலும், 31.03.2020 இலும் உள்ள ஐயக்கடன் ஏற்பாட்டுக்கணக்கு மீதியானது முறையே ரூ. 20 000 உம், ரூ. 38 000 உம் ஆகும்.
- ✓ 31.03.2020 இல் முடிந்த வருட காலத்தில் பதிவழிப்பு செய்த அறவிடமுடியாத கடன் தொகை ரூ 4 000.
- ✓ கடந்த வருடம் பதிவழிப்பு செய்த கடன் தொகை இந்த வருடம் மீளப்பெறப்பட்டது ரூ 3 000 ஆகும்.

ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கை தயாரிக்கின்றது. எனின் 31.03.2020 முடிந்த ஆண்டுக்கான வருமானக்கூற்றில் கடன்படுனர் தொடர்பான செலவு தொகை யாது?

(1) ரூ. 17 000 (3) ரூ. 21 000 (5) ரூ. 19 000
(2) ரூ. 18 000 (4) ரூ. 22 000 (…….)

17. வணிகமொன்றின் கூலி தொர்பான விடயங்கள் பின்வருமாறு.

- ✓ உற்பத்தி பொருள் M ஒன்றுக்கு அனுமதித்த நியம நேரம் 8 நிமிடங்கள்.
- ✓ மூன்று ஊழியர்கள் 8 மணித்தியாலங்களை கொண்ட 8 வேலை நாட்கள் வேலையில் ஈடுபட்டு 1500 M அலகு பொருட்களை உற்பத்தி செய்துள்ளனர்
- ✓ சாதாரண மணித்தியாலயக் கூலி வீதம ரூ. 200 அத்தோடு சேமிக்கும் நேரத்திற்கான ஊக்குவிப்பு கூலி வீதம் சாதாரண கூலி வீதத்தில் 50% ஆகும்.

(1) ரூ. 44 400 (3) ரூ 38 400 (5) ரூ. 41 400
(2) ரூ. 12 800 (4) ரூ. 39 200 (…….)

18. **PLC** ஒன்றின் உரிமைத்துவம் தொடர்பான தகவல்கள் வருமாறு

விபரம்	31.03.2020	31.03.2019
சாதாரண பங்கு மூலதனம் …………..	4 500	4 000
மீள்மதிப்பு மிகை ஒதுக்கம் ………….	1 100	800
நிறுத்திவைத்த இலாபம் ……………...	1 700	1 200

2019/2020 இல் செலுத்திய பங்கு இலாபம் ரூ. 400 ஆகும் அத்தோடு நிறத்தி வைத்த இலாபத்தைப் பயன்படுத்தி பங்கு ஒதுக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2019/2020 இல் முடிநத்த ஆண்டுக்கான மொத்த முற்றடக்கல் வருமானம் யாது?

(1) ரூ. 1 400 (3) ரூ. 1 100 (5) ரூ. 1 700
(2) ரூ. 1 500 (4) ரூ. 1 000 (…….)

19. காந்தன்,கந்தன் ஆகியோர் 01.04.2019 இல் முறையே ரூ. 300 000, ரூ. 200 000 பணத்தை மூலதனமாக ஈடுபடுத்தி பங்குடைமை வியாபாரத்தை ஆரம்பித்தனர். **இவர்களின் ஒப்பந்தங்கள்** இலாப/நட்டம் சமன், மூலதனத்திற்கான ஆண்டு வட்டி 10% 31.03.2020 இல் உள்ளவாறான பங்காளர்களின் உரிமைத்துவமும், வருட காலத்தில் எடுத்துள்ள பற்றுத் தொகையும் வருமாறு.

பங்காளர்	உரிமைத்துவம்	பற்று
காந்தன்	370 000	40 000
கந்தன்	290 000	10 000

31.03.2020 இல் முடிந்த ஆண்டிற்கான பங்குடைமை உழைத்த தேறிய இலாபம் யாது?

(1) ரூ. 160 000 (3) ரூ. 110 000 (5) ரூ. 100 000
(2) ரூ. 180 000 (4) ரூ. 210 000 (…….)

do not copy by M.M.Thinesh

20. 01.04.2019 இல் ஆரம்பக்கப்பட்ட PLC யின் வருமானக் கூற்றில் இருந்து எடுக்கப்பட்ட விபரங்கள்

	ரூ.
ஆண்டு வட்டி செலவு	600
ஆண்டுக்கான வருமானவரி மதிப்பீடு	800
ஆண்டுக்கான இலாபம்	3 100
ஆண்டுக்கான ஆதனத் தேய்வு	1 100

31.03.2020 இல் உள்ளவாறான மீதிகள்

- வட்டி நிலுவை ரூ. 200
- வரி ஏற்பாடு ரூ. 400
- வியாபார இருப்புக்கள் ரூ. 1 000
- கடன் கொடுத்தோர் ரூ. 1 300

31.03.2020 இல் செயற்பாட்டு நடவடிக்கையில் தேறிய காசு யாது?

(1) ரூ. 5 000 (3) ரூ. 5 100 (5) ரூ. 5 900
(2) ரூ. 4 800 (4) ரூ. 6 200 (…….)

21. வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் 31.03.2020 இல் முடிந்த ஆண்டுடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு.

- ✓ விற்பனைக் கிரயம் ரூ. 2 880 000.
- ✓ மொத்த இலாப வீதம் 40%
- ✓ ஆண்டுக்கான விற்பனைகள் யாவும் கடனுக்கு இடம்பெற்றுள்ளது, வருடமொன்றில் உள்ள வேலை நாட்கள் 360 என கொள்க.
- ✓ 31.03.2019 இலும், 31.03.2020 இலும் உள்ளவாறான கடன்படுனர் மீதிகள் முறையே ரூ 220 000 உம், ரூ. 260 000 உம் ஆகும்.

கம்பனியின் கடன் வசூலிப்பு காலம் யாது?

(1) 9 நாட்கள் (3) 27 நாட்கள் (5) 18 நாட்கள்
(2) 5 நாட்கள் (4) 16 நாட்கள் (…….)

22. வணிகமொன்றின் 2020 ஜனவரி மாத சம்பளப்பட்டியலில் இருந்து பெறப்பட்ட தகவல்கள்

	ரூ.
அடிப்படைச் சம்பளம் ……………………..	80 000
மேலதிக நேரக் கூலி ………………………	10 000
கழிப்பனவுகள் - விழா முற்பணம் ……	5 000
-EPF…………………..	8 000

தொழில் தருனரின் EPF பங்களிப்ப வீதம் சம்பளத்தில் 15%

வணிகத்தின் ஜனவரி மாத ஊழியர் தொடர்பான மொத்தச் செலவு யாது?

(1) ரூ. 115 000 (3) ரூ. 103 000 (5) ரூ. 90 000
(2) ரூ. 118 000 (4) ரூ. 102 000 (…….)

23. நிறுவனம் ஒன்று 01.01.2020 இல் ரூ.300 000 மூலதனமாக ஈடுபடுத்தி ஆரம்பிக்கப்பட்டது. குறித்த ஒரு மாத காலத்தில் ரூ. 250 000 இற்கு பொருட்கள் கொள்வனவு செய்து இவற்றில் ரூ. 180 000 பெறுமதியானவற்றை கிரயதில் 40% இலாபத்துடன் விற்பனை செய்துள்ளது. 31.01.2020 இல் வணிகத்தின் உரிமைத்துவம் ரூ. 322 000 ஆக இருந்தது. இக்காலப் பகுதிக்கான ஏனைய தொழிற்பாட்டு வருமானங்கள் ரூ. 4 000.
உரிமையாளர் மேலதிக மூலதனமிடலையோ அல்லது பற்றுக்களையோ மெற்கொண்டிருக்கவில்லை எனின்,

2020 ஜனவரி மாத நிறுவனதின் செயற்பாட்டு செலவீனத் தொகை யாது?

(1) ரூ.50 000 (3) ரூ.54 000 (5) ரூ.102 000
(2) ரூ.82 000 (4) ரூ.62 000 (…….)

24. வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஒன்று வாகனம் ஒன்றை 6 வருட குத்தகையில் ரூ 600 000 நியாயப் பெறுமதிக்கு 01.04.2016 இல் கொள்வனவு செய்தது. இதற்கான வருடாந்த தவணைக்கட்டணம் ரூ. 135 000 ஆகும். இவ் ஆதனத்தின் குத்தகைக்காலம் ஆயுட்காலத்திற்கு சமமாகும். எஞ்சிய பெறுமதிகள் எவையுமில்லை.

குத்தகை வட்டி தொடர்பான விபரம்

31.03.2017 ஆம் வருடத்திற்கானது ரூ. 60 000
31.03.2018 ஆம் வருடத்திற்கானது ரூ. 50 000
31.03.2019 ஆம் வருடத்திற்கானது ரூ. 40 000
31.03.2020 ஆம் வருடத்திற்கானது ரூ. 30 000
31.03.2021 ஆம் வருடத்திற்கானது ரூ. 20 000
31.03.2022 ஆம் வருடத்திற்கானது ரூ. 10 000

doc not copy by M.M.Thinesh

31.03.2020 இல் உள்ளபடியான (குத்தகை தொடர்பாக) நடைமுறையல்லாத பொறுப்புத் தொகை, அவ்வாண்டுக்கான குத்தகை ஆதனம் தொடர்பான மொத்த செலவுகள் என்பவை?

	நடைமுறை அல்லாப் பொறுப்பு	**குத்தகை ஆதன மொத்தச் செலவு**
(1)	240 000	130 000
(2)	125 000	30 000
(3)	125 000	100 000
(4)	115 000	30 000
(5)	125 000	130 000

(…….)

25. WAC முறையில் விநியோக விலையிடலை மேற்கொள்ளும் வணிக நிறுவனமொன்றின் விற்பனை பொருள் சப்பாத்து தொடர்பான தகவல்கள் வருமாறு.

01.01.2020 இல் கொள்வனவுகள் 1 000 அலகுகள் ஒவ்வொன்றும் ரூ. 120 படி
02.01.2020 இல் கொள்வனவுகள் 1 500 அலகுகள் ஒவ்வொன்றும் ரூ. 150 படி
04.01.2020 இல் விநியோகஸ்தருக்கான திரும்பல் 500 அலகுகள் (02.01.2020 இல் கொள்வனவு செய்யப்பட்டவைகளிலிருந்து)
05.01.2017 இல் விற்பனைகள் 1 500 அலகுகள் ஒன்று ரூ. 160 படி.
குறித்த காலப் பகுதிக்கான வணிகத்தின் மொத்த இலாபம், இறுதியிருப்புக் கிரயம் என்பன யாது?

	மொத்தலாபம்	**இறுதியிருப்புக் கிரயம்**
(1)	33 000	67 500
(2)	60 000	60 000
(3)	37 000	67 000
(4)	15 000	75 000
(5)	37 500	35 000

(…….)

26. விளையாட்டுப் பொம்மைகளை உற்பத்தி செய்து விற்கும் வணிகமொன்றின் தகவல்கள் வருமாறு.

விபரம்	உற்பத்தி நிலையம் P	உற்பத்தி நிலையம் Q
பாதிக்கப்பட்ட மேந்தலை கிரயம்	350 000	240 000
பாதிடப்பட்ட இயந்தி மணித்தியாலம்	17 500	6 000
பொம்மை ஒன்றுக்கு தேவைப்படும் இயந்திர மணித்தியாலம்	5	2

பொம்மை ஒன்றுக்கான நேர் பொருள், நேர் கூலி என்பன முறையே ரூ. 240 உம், ரூ. 60 உம், எனின்.
விளையாட்டுப் பொம்மை ஒன்றுக்கான உற்பத்திக் கிரயம் யாது

(1) ரூ. 480 (3) ரூ. 180 (5) ரூ. 640
(2) ரூ. 360 (4) ரூ. 320 (…….)

27. பங்குடைமை வணிகத்துடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு

பங்காளர்கள்	அகில்	சுகில்	அனில்
31.03.2020 இல் உரிமைத்துவம்	460 000	380 000	180 000
31.03.2020 இல் நடைமுறைக்கணக்கு மீதி	60 000	80 000	20 000

பங்காளர் அனில் 01.04.2020 இல் பங்குடைமையில் இருந்து இளைபாறினார் இதன் போது 5:3:2 என பங்கிடப்பட்டுவந்த இலாபநட்ட விகிதம் அகில், சுகில் ஆகியோரிடையே சமன் என தீர்மானிக்கப்பட்டது. பங்காளர் அனில் விலங்கும் தினத்தில் அவருக்கு செலுத்தவேண்டிய தொகை நன்மதிப்பு உள்ளடங்கலான மொத்தக் தொகை ரூ.200 000 என கணிக்கப்பட்டது.

பங்குடைமை நிறுவனத்தின் நன்மதிப்பு பெறுமதி, பங்காளர் சுகிலின் நன்மதிப்பு சீராக்கத்தின் பின்னரான மூலதன மீதி என்பவை முறையே யாது?

(1) ரூ.100 000, ரூ.280 000 (3) ரூ.60 000, ரூ.290 000 (5) ரூ.200 000, ரூ.300 000
(2) ரூ.180 000, ரூ.260 000 (4) ரூ.90 000, ரூ.290 000 (…….)

28. உற்பத்தி வணிகமொன்றுடன் தொடர்புடைய மூலப்பொருள் X-1 தொடர்பான தகவல்கள் வருமாறு.

மூலப்பொருள் X-1 இன் வருடாந்த கட்டளையிடல் கிரயம் ரூ.6 000 பேணப்படுகின்றபோது அப்பொருளின் அலகு ஒன்றுக்கான வருடாந்த பராமரிப்பு கிரயம் ரூ.10 இப் பொருள் தொடர்பான கட்டளை ஒன்றிக்கான கிரயம் ரூ. 300 ஆகும் இவ்வணிகம் சிக்கன கட்டளை தொகையை மறுகட்டளை தொகையாக கொண்டுள்ளது.

சிக்கன கட்டளை தொகை (EOQ) அலகுகள், வருடாந்தம் தேவைப்படும் மூலப்பொருள் அலகுகள் என்பன முறையே

(1) 1 000 அலகுகள், 20 000 அலகுகள்
(2) 1 600 அலகுகள், 24 000 அலகுகள்
(3) 2 400 அலகுகள், 25 000 அலகுகள்
(4) 1 000 அலகுகள், 48 000 அலகுகள்
(5) 1 200 அலகுகள், 24 000 அலகுகள் (…….)

29. வணிகமொன்றின் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கொள்வனவு பற்றிய தகவல்கள்.
ஒவ்வொன்றும் ரூ. 200 000 கிரயமான மூன்று பொறிகள் குறித்த தினம் ஒன்றில் கொள்வனவு செய்யப்பட்டது. இதன் போது பொறிகளின் பட்டியல் விலையில் 10% தீர்வை இதற்கு விதிக்கப்பட்டது. ஒவ்வொரு பொறியினது பொருத்தல் தொடர்பாக தலா ரூ. 10 000 செலவு ஏற்பட்டுள்ளது. இப்பொறிகள் மூன்றினதும் பரீட்சார்த்த செயற்பாட்டிற்காக ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ.40 000 ஏற்பட்டிருந்ததோடு செயற்பாட்டில் பெறப்பட்ட உற்பத்திகள் அனைத்தும் ரூ. 20 000 இற்கு விற்றுத் தேறியது.

LKAS 16 இன்படி ஆரம்ப இனங்காணலில் பொறிகளின் மொத்தக் கிரயம் யாது?

(1) ரூ. 670 000 (3) ரூ. 270 000 (5) ரூ. 710 000
(2) ரூ. 700 000 (4) ரூ. 600 000 (…….)

30. வணிகமொன்று கவனத்தில் கொண்டுள்ள P.Q ஆகிய இரு முதலீட்டுச் செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ள இம்முதலீட்டுக்கு நிறுவனத்திடம் காணப்படுகின்ற காசு ரூபா 200,000 ஆகும் நிறுவனத்தின் நியம் திரும்பல் காலம் உச்ச அளவு 03 வருடங்களாகும்.

	P செயற்திட்டம்.	**Q செயற்றதிட்டம்**
ஆரம்ப முதலீடு (ரூபா)	400,000	400.000
மீள் திரும்பல் காலம்	4	2
தேறிய நிகழ்கால பெறுமதி (ரூபா)	60,000	52,000

மேலே தரப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பிலான சில கூற்றுக்கள்ள கீழே தரப்படுகின்றன
A. திரும்பல் கால முறைக்கேற்ப P செயற்திட்டத்தை தெரிவு செய்தல் பொருத்தமானது
B. திரும்பல் கால முறைக்கேற்ப Q செயற்திட்டதை தெரிவு செய்தல் பொருத்தமானது
C. தேறிய நிகழ்காலப் பெறுமதிக்கேற்ப P செயற்றதிட்டத்தை தெரிவு செய்தல் பொருத்தமானது
D. தேறிய நிகழ்காலப் பெறுமதிக்கேற்ப Q செயற்றதிட்டத்தை தெரிவு செய்தல் பொருத்தமானது
E. தேறிய நிகழ்காலப் பெறுமதி மற்றும் கால முறைக்கேற்ப இவ்விரு செயற்திட்டங்களும் பொருத்தமானது.
மேலே தரப்பட்ட கூற்றுக்களில் சரியானவை

(1) A,C மாத்திரமாகும் (2) A,D மாத்திரமாகும் (3) B,C மாத்திரமாகும
(4) B,D மாத்திரமாகும; (5) E மாத்திரமாகும் (........)

31 முதல் 50 வரையான வினாக்களுக்கான சுருக்கமான விடைகளைப் புள்ளிக்கோடுகளில் எழுதுக.

31. வணிகமொன்றில் 01.04.2019 இல் காணப்பட்ட வாகனத்தின் கிரயம் ரூ.400 000 ஆகும். அத்தினத்தில் இதன் கொண்டு செல்மீதி ரூ.360 000 ஆக இருந்தது. இவ் வாகனம் 01.01.2020 இல் விற்கப்பட்டு ரூ. 240 000 காசு பெறப்பட்டதோடு அத்தினம் ரூ.800 000 கிரயமான புதிய வாகனம் கொள்ளவனவு செய்யப்பட்டது.
வாகனங்களுக்கு அதன் கிரயத்தில் நேர்கோட்டு முறையில் 20% வருடாந்த தேய்விடுதல் நிறுவனத்தின் கொள்கையாகும்.

(அ) வாகன அகற்றல் மூலம் நிறுவனம் அடைந்த இலாபம் / நட்டம் யாது? : ரூ. …………………………
(ஆ) 31.03.2020 இல் முடிந்த வருட தேய்வுத் தொகை யாது? : ரூ. …………………………

32. கம்பனி வணிகம் ரூ.200 000 பட்டியல் விலையான பண்டங்களை 10% வியாபாரக் கழிவுடன் கடனுக்கு 01.02.2020 இல் கொள்வனவு செய்து அதே திகதியில் அப்பொருட்களை ரூ. 15 000 பொதியிடல் செலவுடன் விற்பனை செய்து ரூ. 240 000 காசு பெற்றுள்ளது.

குறித்த கொடுக்கல் வாங்கல்களின் தேறிய தாக்கம் யாது?

சொத்து : ரூ. ………………. உரிமை : ரூ. …………………

33. வணிகமொன்றுடன் தொடர்புடைய 2020 மார்ச் மாத கடன்கொடுத்தோர் தொடர்பான தகவல்கள் வருமாறு:
- ✓ கடன்கொடுத்தோருக்கு 10% கழிவு நீக்கி செய்த கொடுப்பனவுகள் மொத்தம் ரூ. 360 000
- ✓ வெளித்திரும்பிய சரக்குகள் ரூ. 60 000
- ✓ வினியோகஸ்தரால் விதிக்கப்பட்ட வட்டித தொகை ரூ. 5 000
- ✓ மார்ச் மாதத்தில் கடன்கொடுனரின் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு ரூ. 50 000 ஆகும்.

2020 மார்ச் மாத கடன்கொள்வனவு தொகை யாது? ரூ. ………………………………

34. நீண்டகால தீர்மானமெடுத்தல் செயன்முறையில் இடம்பெறும் **காசுப் பாய்சல் மதிப்பீட்டில்** பயன்படுத்தப்படும் எடுகோள்கள் 4 குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………
3. ……………………………………………………………………………………
4. ……………………………………………………………………………………

do not copy by M.M.Thinesh

35. உற்பத்தி வணிகமொன்றுடன் தொர்புடைய மேந்தலை தொர்பான தகவல்கள்:

விபரம்	உற்பத்தி பகுதி **A**	உற்பத்தி பகுதி **B**
பாதிட்ட இயந்திர மணித்தியாலம்	20 000	9 000
இயந்திர மணி ஒன்றுக்கான உறுஞ்சல வீதம் (ரூ)	40	50
தளப்பரப்பு (சதுர மீற்றர்)	1 000	80
மின்குமிழ்கள் எண்ணிக்கை	80	18
அலகு ஒன்றுக்கு தேவைப்படும் இயந்திர மணித்தியாலம்	4	2

மேந்தலை உறுஞ்சல் வீதம் கணிப்பிட்ட போது மேந்தலை தொகையில் பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது.

தொழிற்சாலை கட்டிடவாடகை ரூ. 78 000, தொழிற்சாலை மின்சாரக்கட்டணம் ரூ. 49 000

(அ) சீராக்கத்திற்கப் பின்னர் உள்ள புதிய மேந்தலை
உறிஞ்சல் வீதங்கள் யாது? பகுதி : **A** ரூ. …………………………..
பகுதி : **B** ரூ. …………………………..

(ஆ) சீராக்கத்திற்குப் பின்னர் உற்பத்தி அலகு ஒன்றுக்கான
மேந்தைலை உள்ளடக்கம் யாது? ரூ. ………………………………………

36. வரையறுகக்கப்ட்ட கம்பனி ஒன்றின் 31.03.2020 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள் வருமாறு.

		ரூ.
வருமானக் கூற்றில் எடுக்கப்பட்டவை	- ஆண்டுக்கான இலாபம் …….	450 000
	- ஆண்டிற்கான வருமானவரி மதிப்பீடு ……	150 000
நிதிநிலைக் கூற்றில் எடுக்கப்பட்டவை	- 15% தொகுதிக் கடன்கள் ………………	800 000
	- நடைமுறைப் பொறுப்புகள்…………..	100 000
	- மொத்தச் சொத்துக்கள்……………..	2 500 000

(அ) வட்டிக்காப்பு விகித தடவைகள் : ……………………………………….

(ஆ) கடன் - உரிமை விகித தடவைகள் : ……………………………………….

37. வணிகமொன்றின் மூலப்பொருள் X தொடர்பான தகவல்கள்.

- உச்ச இருப்பு மட்டம் 5 800 அலகுகள்.
- மறுகட்டளை தொகை 3 000 அலகுகள்.
- மூலப்பொருள் இழிவுப் பாவனை 500 அலகுகள்
- முதன்மைக்காலம் 4 வாரங்கள் முதல் 6 வாரங்கள் வரை.

(அ) வாரம் ஒன்றிற்கான மூலப்பொருள் உச்சப்பாவனை அளவு :…………………………………………..

(ஆ) மறு கட்டளை மட்டம் :…………………………………………..

38. வணிகமொன்றில் இடம்பெற்ற கணக்கீட்டுப்பதிவுகளில் கண்டறியப்பட்ட தவறு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. **இதனை திருத்தம் செய்வதற்கான நாட்குறிப்பு பதிவினைத் தருக.**

கடன்பட்டோன் ஒருவனிடம் இருந்து 10% கழிவு நீக்கிய பின்னர் பெறப்பட்ட காசு ரூ. 54 000 இற்கும் கழிவிற்கும் காசு பெறுவனவு நாட்குறிப்பேட்டில் சரியாக பதிவு இடம்பெற்றுள்ள போதிலும் கடன் கொடுத்தோர் கணக்கில் காசுத் தொகை ரூ. 45 000 என செலவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

………
………
………

39. வணிகமொன்றின் கடன் கொடுத்தோர் பட்டியல் மொத்த மீதியானது ரூ.80 000 ஆக இருந்தது. எனினும் பின்வரும் தவறுகள் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

- வழங்குனரால் விதிக்கப்பட்ட வட்டி ரூ. 5 000 நபர் கணக்கில் வரவில் ரூ. 500 என பதிவிடப்பட்டுள்ளது.
- வழங்குனர் ஒருவருக்கு செலுத்திய ரூ. 6 000 காசோலை வங்கியால் மறுக்கப்பட்டபோது இதற்கான பதிவு உரிய நபர் கணக்கில் ரூ. 16 000 என பதிவிடப்பட்டுள்ளது.
- கொள்வனவு நாளேடு ரூ. 50 000 ஆல் குறைத்து கூட்டப்பட்டிருந்தது.

(அ) பிழைகள் சீராக்குவதறகு முன்னர் உள்ள கடன்
கொடுனர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி யாது? : ரூ……………………………………….

(ஆ) பிழைகள் சீராக்கப்பட்ட பின்னர் உள்ள கடன்
கொடுனர் பட்டியல் மீதி யாது? : ரூ……………………………………….

do not copy by M.M.Thinesh

40. கம்பனி ஒன்றில் ரூ. 10 000 இற்கான செலவுத்தாள் தொகையொன்று கடன்பட்டோர் கணக்கிற்கும் உட்திரும்பல் கணக்கிற்கும் முறையே வரவிலும், செலவிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும் ஆண்டிறுதிக் கடன்பட்டோர் மீதிக்கு 10% ஐயக்கடனும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பிழை காரணமாக கீழே தரப்பட்டுள்ள **உருப்படிகள்** மீது ஏற்படக்கூடிய **தாக்கத்தை அதிகரிக்கும் / குறையும் / மாற்றமில்லை என்பதை பெறுமதிகளுடன் தருக?**

(1) தேறிய இலாபம் ……………………………

(2) தொழிற்பாடு மூலதனம் ……………………………

(3) உரிமையாண்மை ……………………………

(4) நடைமுறைச் சொத்து ……………………………

41. **எக்கோ** விளையாட்டு கழகத்தின் தகவல்கள்:

- ❖ கழகத்தினது விளையாட்டு மைதானமானது மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ.1 000 வீதம் வெளி நிறுவன பாவனைக்காக வாடகைக்கு விடப்படுகின்றது
- ❖ கழக அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் வருடாந்தம் ரூ.250 சந்தா செலுத்த வேண்டும்
- ❖ 01.01.2019 இல் வருமதிகள் சென்மதிகள் எதுவும கழகத்தின் புத்தகங்களில் இருந்திருக்கவில்லை.
- ❖ 2019 ஆம் ஆண்டில் 102 மணித்தியாலங்களுக்கான வாடகைப் பணம் பெறப்பட்டுள்ளதோடு 2019ஆம் ஆண்டிற்காக 18 மணித்தியாலங்களுக்கான வாடகைப்பணம் பெறப்பட்டிருக்கவில்லை. பெறப்பட்ட பணத்தில் 2020 இற்குரிய 30 மணித்தியாலங்களுக்கான வாடகைப்பணம் உள்ளடங்கப்பட்டுள்ளது.
- ❖ கழக அங்கத்தவர்கள் 34 பேர் தமது சந்தாப்பணத்தை செலுத்தியிருந்தனர், இதில் 4 அங்கத்தவர்களின் பணம் 2020 இற்காகவும் செலுத்தப்பட்டிந்ததோடு 7 அங்கத்தவர்கள் 2019 இற்காக சந்தாவை செலுத்தியிருக்கவில்லை, 2019 ஆம் ஆண்டிற்கான மைதான பராமரிப்பு செலவுத்தொகைரூ.22 250 உம். கழக செயற்பாட்டு செலவுகள்ரூ.17 000 உம் ஆகும்.

(அ) 2019 ஆண்டிற்கான பின்வருவன,

சந்தா வருமானம் : ரூ. ……………………………………..

மைதான வாடகை வருமானம் : ரூ. ……………………………………...

(ஆ) 2019 ஆம் ஆண்டிற்கான கழகத்தின் வருமான மிகை யாது : ரூ. ……………………….

42. வரையறுத்த கம்பனி ஒன்றின் 2019/2020 வருட காலப்பகுதிக்கான தகவல்கள் வருமாறு.

31.03.2019 இல் காணப்பட்ட மீதிகள் வருமாறு

- மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	ரூ.	300 000
- நிறுத்திவைத்த இலாபம்	ரூ.	150 000
- கூறப்பட்ட சாதாரண பங்கு முதல்	ரூ.	400 000

- 2019/2020 இல் கம்பனியின் காணி ரூ. 500 000 ஆல் குறைத்து மீள் மதிக்கப்பட்டுள்ளது. அக்காணி முன்னைய வருடத்தில் ரூ. 300 000 மிகைமதிப்பு செய்யப்பட்டு ஏடுகளில் பதிவுகள் இடம்பெற்றுள்ளன.
- மேலும் பங்கு மூலதனமானது ரூ. 250 000 உரிமை வழங்கலாகவும், ரூ. 150 000 நிறுத்திவைத்த இலாபத்தில் இருந்து உபகார வழங்கலாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
- 2019/2020 ஆம் வருடத்திற்கான மொத்த இலாபமானது ரூ. 950 000 ஆகவும், நிர்வாக மற்றும் வினியோக செலவுகள் ரூ. 350 000 ஆகவும் உள்ளது.

31.03.2020 இல் உள்ளவாறன மொத்த உரிமைத்துவத் தொகை யாது? : ரூ. ………………………………

43. கம்பனி ஒன்றின் தனிப்பொருள் உற்பத்தி தொடர்பான தகவல்கள் வருமாறு:

உற்பத்தி மட்டம்	செயற்பாட்டுமட்ட அலகுகள்	மோத்தக் கிரயம் (ரூ)
1	400	180 000
2	1 000	260 000

உற்பத்தி மட்டம் 1 இல் இருந்து உற்பத்தி மட்டம் 2 இற்கு செயற்பாட்டை மாற்றும் புதிய தொழிநுட்ப பிரயோகம் காரணமாக அலகு மாறும் கிரயமானது ரூ. 100 ஆல் குறைவடைகிறது. எவ்வாறாயினும் அலகு விலை ரூ. 400 இலும் மொத்த நிலையான கிரயத்திலும் எதுவித மாற்றமும் ஏற்படாதிருக்கும்.

உற்பத்திமட்டம் 2 இல் ரூ. 40 000 இலாபம் அடையவேண்டுமாயின் எத்தனை அலகுகள் விற்பனை செய்யவேண்டும்.

அலகுகள் : …………………………………

do not copy by M.M.Thinesh

44. கீழே தரப்பட்டுள்ளது கம்பனி ஒன்றின் குறித்த செயற்பாட்டு மட்டத்துடன் தொடர்புடைய இலாப – அளவு வரைபடமாகும். இப்பொருளின் அலகொன்றுக்கான மாறும் கிரயம் ரூ.250 ஆகும்.



(அ) பொருளின் அலகு விற்பனை விலை யாது? : ரூ……………………………..

(ஆ) செயற்பாட்டு மட்டத்திற்கான நிலையான கிரயம் யாது? : ரூ……………………………..

45. கம்பனியொன்றின் தனிப்பொருள் உற்பத்தி தொடர்பான தகவல்கள் வருமாறு:
500 அலகுகளை சந்தைப்படுத்தும் போது விற்பனை வருமானம் ரூ. 40 000 ஆகும். குறித்த பொருளின் அலகொன்றின் மாறும் கிரயம் ரூ. 50 ஆக உள்ளது. கம்பனி அலகு விலையை ரூ.70 ஆக குறைக்கின்ற தந்தியோபாய முறையை அறிமுகப்படுத்த தீர்மானித்துள்ளது. இதன் காரணமாக 600அலகுகள் சந்தைப்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(அ) குறித்த தந்திரோபாயத்தை நடைறைப் படுத்துவது அனுகூலமானதா? : ………………………………….

(ஆ) (அ) வில் உமது விடைக்கான காரணம் யாது?

………
………
………

46. கம்பனி ஒன்று 31.03..2020 இல் தனது இருப்பு கணிப்பீட்டை மேற்கொள்ள தவறியுள்ளது இதன் காரணமாக தாமதமா 20.04.2020 இல் இருப்பு கணிப்பீட்டை மேற்கொண்ட போது அதன் பெறுமதி ரூ. 120 000 ஆக இருந்தது.

01.04.2020 முதல் 20.04.2020 வரையான காலப்பகுதியில் நடைபெற்றுள்ள விடயங்கள் வருமாறு:

- ✓ விற்பனையில் 40% மொத்தலாபத்துடன் ரூ. 60 000 பட்டியல் விலையிட்ட பண்டங்கள் விற்கப்பட்டுள்ளது.
- ✓ 05.04.2020 இல் ரூ.80 000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் 50% ஆனவை மட்டும் 20.04.2020 வரை நிறுவனத்தை வந்தடைந்துள்ளது.
- ✓ 10.04.2020 மழை வெள்ளம் காரணமாக ரூ.10 000 கிரயமான பொருட்கள் முற்றாக அழிந்துள்ளது.

31.03.2020 இல் நிதிநிலைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய இருப்பின் பெறுமதி யாது?
ரூ. …………………………

47. லது, மது ஆகியோரது பங்குடைமை வணிகத்தின் ஏட்டில் எடுக்கப்பட்ட நடைமுறை கணக்கு மீதிகள் வருமாறு:

	31.12.2019	**31.12.20158**
லது	90 000	60 000
மது	80 000	40 000

மேலதிக தகவல்கள்
மது பங்குடைமைக்கு கடன் ஒன்றை வழங்கியிருந்தார்.

பங்காளர்கள் 1890 ஆம் ஆண்டு பங்குடைமை சட்டத்தின் பிரகாரம் செயற்பட உடன்பட்டுள்ளனர். இருந்த போதும் பின்வரும் தவறுகள் கணக்கீட்டு பதிவுகளில் இடம் பெறவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது

- 31.12.2019 இல் முடிவடைந்த ஆண்டில் லதுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள காசுப்பற்று ரூ.20 000, பொருள் பற்று ரூ 30 000.
- 31.12.2019 இல் முடிந்த ஆண்டில் மதுவின் காசுப்பற்று ரூ. 20 000
  கடனுக்கான வட்டி தொடர்பான பதிவு ஏடுகளில் சரியான முறையில் பதிவிடப்பட்டுள்ளது.

(அ) 31.12.2019 இல் லதுவின் திருத்தமான நடைமுறைக்கணக்கு மீதி யாது? : ரூ. ……………………………..

(ஆ) மதுவிடம் இருந்து பங்குடைமை பெற்றுள்ள கடன் தொகை யாது? : ரூ. ……………………………..

do not copy by M.M.Thinesh

48. பின்வரும் கிரய உருப்படிகளில் எவை தளபாட உற்பத்தியில் ஈடுபடும் கம்பனி ஒன்றில் **உற்பத்தி மேந்தலை கிரயங்களாக வகைப்படுத்தலாம்.**

வகைப்படுத்தல்	**உற்பத்தி மேந்தலை கிரயம் (ஆம் / இல்லை)**
(A) பாவித்த அரிமரக்கிரயம்	…………………………….
(B) பாவித்த இயந்திர உராய்வு நீக்கி எண்ணை	…………………………….
(C) விற்பனைமுகவர் கூலிச் செலவு	…………………………….
(D) உற்பத்தி செய்முறைக்கான காவலாளி கூலி	…………………………….

49,50 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களை பயம்படுத்துக.

கம்பனி புதிய பொறி ஒன்றில் மூலதன முதலீட்டை மேற்கொள்ளதீர்மானித்துள்ளது. அது பற்றிய தகவல்கள்

- குறித்த பொறியின் ஆயுட்காலம் 5 வருடங்கள்.
- பொறி மூலம் எதிர்பார்க்கும் தேறிய காசோட்டமும் 10% திரும்பல் வீதத்தில் கழிவீட்டுக்காரணி பற்றி விபரமும்.

வருடம்	1	2	3	4	5
தேறிய காசோட்டம் (ரூ) 000 இல்	1 000	800	800	1 200	600
கழிவீட்டு காரணி	0.9	0.8	0.7	0.6	0.5

- குறித்த பொறியின் திரும்ப அளித்தல் காலம் 2 வருடங்களும் 3 மாதமும் என மதிப்பிடப்பட்டிருந்தது.

49. பொறி தொடர்பான மூலதன முதலீட்டில் 0 ஆம் ஆண்டில் ஆரம்ப முதலீட்டு கிரயம் யாது?
ரூ. ……………………………..

50. இம் முதலீட்டின் தேறிய நிகழ்கால பெறுமதி (NPV) யாது?
ரூ. ……………………………..

do not copy by M.M.Thinesh